# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

11-ஆம் வகுப்பு **வணிகவியல்** மதிப்பெண்கள் : 45

காலம் : 1.30 மணி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 x 1 = 10

1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு .... என்று பெயர்.
   அ) அங்காடி ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி
2. மருத்துவர் தொழில் என்பது ......
   அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்
3. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
   அ) உற்பத்தி தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்
4. எந்த அமைப்பு ஒரே ஒருவராக உரிமையாளர், நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருக்கும்?
   அ) கூட்டு நிறுவனம் ஆ) அரசு நிறுவனம் இ) கூட்டுறவுச் சங்கம் ஈ) தனியாள் வணிகம்
5. இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
   அ) உடன்படிக்கையால் ஆ) பிறப்பால்
   இ) முதலீட்டின் அடிப்படையில் ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்
6. நிறுமத்தின் இயக்குநரை கீழ்க்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
   அ) கடனீந்தோர் ஆ) கடனாளர் இ) கடனீட்டு பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்
7. ராக்டேல் சொசையிட்டி தோற்றுவித்தவர்............
   அ) ராபர்ட் ஓவென் ஆ) H.C.கால்வெர்ட் இ) டால்மாக்கி ஈ) லம்போர்ட்
8. பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
   அ) கிளைகள் ஆ) அதன் துணை நிறுவனங்கள் இ) தலைமையகம் ஈ) நாடாளுமன்றம்
9. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு .......க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
   அ) 75% ஆ) 60% இ) 95% ஈ) 51%
10. இந்திய மைய வங்கி என்பது
   அ) பி.என்.பி ஆ) எஸ்.பி.ஐ இ) ஐ.சி.ஐ.சி.ஐ ஈ) ஆர்.பி.ஐ

**II. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** 4 x 2 = 8

11. பண்டமாற்று முறை என்றால் என்ன?
12. வேலை என்றால் என்ன?
13. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?
14. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
15. கூட்டுறவு. வரையறு.
16. பொதுக் கழகங்களுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.

**III. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** 4 x 3 = 12

17. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
18. போக்குவரத்து - சிறு குறிப்பு வரைக.
19. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
20. அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன?
21. இந்தியப் பன்னாட்டு நிறுவனங்கள் ஏதேனும் மூன்றை குறிப்பிடுக.
22. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றிக் கூறுக.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 3 x 5 = 15

23. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (அல்லது)
    இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக.
24. தொழிலின் நோக்கங்களை விவரி (அல்லது) கூட்டுறவு சங்கத்தின் வகைகளைக் கூறுக.
25. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (அல்லது)
    கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி.



www.Padasalai.Net

CamScanner